Apollo Pier Road,
Bombay-1.
21. 4. 59.

அன்பார்ந்த ஐயா,

தாஸ்ய விஞ்ஞாபனம். இருமாதங்களுக்கு முன்பு, நான் Book Post மூலம் என் பாட்டனார் எழுதிய இரு நூல்களாகிய தமிழ் வரலாற்"றையும், "குறுந்தொகை விளக்கத்"தையும் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருந்தேன். உடன் ஒரு கடிதமும் எழுதியிருந்தேன். அவையிரண்டும் தங்கட்கு வந்து சேர்ந்திருக்குமென நம்புகிறேன். அந்நூல்களிரண்டும் தங்களைப் போன்ற கல்வியாற் பெரியார்க்குப் பெருவிருந்தாய் அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நான் மே 12உ தொடங்கி ஜூன் 17உ வரை கோடை விடுமுறைக்கு இராமநாதபுரம் செல்ல எண்ணியுள்ளேன். அவ்வமயம் தாங்கள் பம்பாய் விஜயம் செய்தால் என்னால் தங்களைத் தரிசிக்க இயலாமல் போய்விடும். தாங்கள் பிற சமயங்களில் பம்பாய் வருவதாக இருந்து, எனக்குத் தங்கள் வருகையை அறிவித்தால், தங்களை நேரில் கண்டு, என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கப் பெரிதும் ஆவலுடையேன். இப்பேற்றை எனக்குத் தாங்கள் தயை கூர்ந்து அளிப்பீர்களென நம்புகிறேன்.

தாஸன்

ரா. விஜயராகவன்